சக்தி சக்திதாசனின்

# தமிழ்ப்பூங்கா

மலர் 4 இதழ் 18 நண்பர்களுக்கு மட்டும் இலவசம் இருமாதங்களுக்கொருமுறை **ஜனவரி** 2008

## நத்தார் புதுவருட பொங்கல் வாழ்த்துக்கள்







ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பதல்ல பெருமை ஒவ்வொரு முறை விழுந்த போதும் எழுந்தான் என்பதுவே பெருமை



இது ஒரு தமிழ்ப்பூங்கா வெளியீடு 1

# இந்த இதழில்




1. எண்ணம்
2. எனது பாரதி
3. சிறுகதை...புன்னகை மறந்த பூங்கொடி
5. பொன்விழாக் கண்ட கவிஞர் வாலி
**6.** ஏதாவது எழுதலாமே
7. கவிதைத்தூறல்
8. அரட்டை அய்யாத்துரை
9. துருவநட்சத்திரம்
10. தொடர்நாவல் -- சொல்லத்துடிக்குது
12. சிரித்து வாழ வேண்டும்
13. கலைஞரின் சங்கத்தமிழ்
14. ஒரு இந்துவின் பார்வை
**16.** இலக்கியச்சோலை
17. அறிவித்தல்கள்




புதிய தொடர்கதை

"சொல்லத்துடிக்குது மனசு"

இந்த இதழில் ஆரம்பம்

# எண்ணம் ---- 18



நிறைகளைக் கவனிக்காது குறைகளை மட்டுமே கண்டுகொள்ளும் மனப்பான்மை அநேகமான மனிதர்களில் ஆழப்பதிந்து போயிருக்கிறது.

உலகத்தில் மனிதனாகப் பிறந்து ஒரு சமுதாயத்தில், ஒரு விதைநிலத்தில் வித்தாக விழுந்து அந்தச் சமுதாயம் என்னும் தோட்டத்திலே மலர்ந்து மணம் வீசத் தொடங்கும் மனிதர், ஏனோ மற்றைய மலர்களின் வாசத்தை உணர்ந்து கொள்ள, ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்.

இந்த அடிப்படைக் குணத்தில் மாற்றம் ஏற்பட்டால் வாழ்க்கையில் எத்தனையோ சிக்கல்களுக்கு விடை கிடைத்துவிடும்.

எமது மனம் என்பது ஒரு கடிவாளமில்லாத குதிரையைப் போன்றது கட்டுக்கடங்காது விரும்பிய திசைகளில் பாய்ந்தோடத் தொடங்கிவிடும். உதாரணமாக எமக்கு பிடிக்காத ஒருவரைப் பற்றி எண்ணத்தலைப்படும் போது அந்த மனமெனும் குதிரை எண்ணமுடியாத பலமைல்களை கணநேரத்தில் கடந்து, அம்மனிதர் தனது மனதில் எண்ணமுடியாதவைகளை அவர் செய்திருப்பார் என்றே நம்பப்பண்ணி விடுகிறது.

எமக்கு வாழ்க்கை கொடுக்கும் சவாலே, அந்த மனமெனும் குதிரைக்கு ஒரு கடிவாளத்தைப் பூட்டி, முன்னேற்றம் என்னும் பாதையில், மற்றவரின் நிறைகளை அளந்து, குறைகளை மன்னிக்கும் மனப்பன்மை என்னும் பசுமையான பூந்தோட்டத்தினூடாக செலுத்துவதே.

ஒரேயொரு நிமிடம் இயக்கத்தை இதயம் நிறுத்தினால் கடந்தகாலமாகிவிடும் எமக்குள் ஏன் இத்தனை பேதமையோ ?

மீண்டும் சந்திக்கும் வரை
அன்புடன்
சக்தி சக்திதாசன்



# எனது பாரதி

கவிஞன் மகாகவியாக மாறுவது அவன் மரணத்தின் பின் தானோ? இக்கேள்வி என் மனதில் பூதாகரமாக எழும் வேளைகள் பல. ஒரு கவிஞனின் மனமெனும் நீரோடையில் தாவித் திரிகின்ற உண்மை எனும் மீன்கள் தவறுதலாக தரையில் விழுந்து மடிவது போல காகிதத்தில் கவிதையாகின்றது. அப்போது அதைச் சுவைக்க பலர் காத்திருப்பார்கள். ஆமாம் அந்த உண்மைகள் மனதில் தாவித் திரியும் வரைதான் உயிரோட்டம் உள்ளவையாகின்றன. கவிஞர்கள் பலர் உலகிலே வாழ்கி றார்கள் ஆனால் அவர்களில் சிலருக்குத்தான் மாகவியாகும் வாய்ப்புகள் கிட்டுகின்றன. ஆனால் அக்கவிஞன் மாகவியாக புகழப்படும்போது அவனின் கல்லறைகள் மட்டும்தான் ஒளிபெறுகின்றன. அத்தகைய ஒரு கவியாகத்தான் பாரதியாரும் வாழ்ந்து மறைந்தார். ஆனால் அவரின் வாழ்க்கையில் இருந்த யதார்த்தம் அவரின் மறைவுக்கு பின்னாலாயே அவரால் நேசிக்கப்பட்ட மனிதர்களுக்குப் புரிந்தது. கவிஞனாக கவிதை மட்டும் பாடாமல் கவிதையாகவே வாழ்ந்து முடித்தவர்.

தமிழ்,தமிழ் என்று வார்த்தைக்கு வார்த்தை நாம் கூழ்ம் போது, தமிழின் மீதான பாசம், தமிழின் மீது நாம் கொண்டுள்ள காதல் எத்தகையது என்று நாம் சிந்திக்க வேண்டும்.

இதைப்பற்றி எமது பாரதியானவர் தனது வாழ்வினிலே கொண்டிருந்த கருத்தைச் சிறிது பார்ப்போம்.

இதற்காக பாரதியாரின் மகளான சகுந்தலா பாரதி அவர்கள் எழுதிய "பாரதி - எனது தந்தை" என்ற நூலில் இருந்து ஒரு பகுதியைப் பார்க்க விழைகிறேன்.

அதிலிருந்து ஒரு பகுதி

" ஸிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரள நன் நாட்டிளம்
பெண்களுடனே சுந்தரத் தெலுங்கினி
ல் பாட்டிசைத்து தோணிகளோட்டி
விளையாடிவருவோம்

என்ற பாடலைப்பற்றி நானொருநாள் என் தந்தையிடம் " ஏனப்பா தெலுங்கில் பாடவேண்டும்? நீதான் தமிழில் நல்ல பாட்டுகள் உண்டாக்கியிருக்கிறாயே ! அவற்றைப் பாடினால் என்ன?" என்று கேட்டேன். அவர் புன்சிரிப்புடன் பின்வருமாறு கூறினார் - " பாப்பா, தமிழ்ப்பாட்டும் பாடலாம். பெரிய பெரிய மகத்தான கவிகள் நம் தமிழ்நாட்டில் இருந்திருக்கிறார்கள். ஆனால் பாடுவதற்குரிய முறையில் பாடலை இசையுடன் அமைத்து அதைச் சுவையுடன் பாடக்கூடிய

சங்கீத வித்துவான்கள் நம் தமிழுலகில் அதிகம் இல்லை. சங்கீதத்தில் தெலுங்கு என்றும் உருது என்றும் வேற்றுமை கிடையாது. ஆங்கிலேயர் தேசாபிமானம் முற்றியவர்கள்: பாஷாபிமானத்திலும் கரை கடந்தவர்கள். ஆனால் சங்கீதத்தில் ஜெர்மன் சங்கீதமும், இத்தாலிய சங்கீதமும் உயர்ந்ததென்பதை அவர்கள் மறுப்பதில்லை.

தவிர, வட தேசத்திலுள்ள அழகிய சிந்து நதியின் மீது, தென் தேசத்திலுள்ள அழகிய சேர நாட்டுப் பெண்கள் உடன் தமிழ் நாட்டினர்களாகிய நாம், சங்கீதத்துக்குகந்த அழகிய பாஷையான தெலுங்கில் பாடி மகிழ்வோம் என்றதன் கருத்து நம் இந்திய தேசம் முழுவதையும் ஒன்றாக்கும் நோக்கத்தில்தான் என்றார்.

நண்பர்களே தமிழுக்காக உயிரைக் கொடுப்பேன், இந்தியநாட்டு சுதந்தி ரத்துக்காக சிறை செல்வேன் என்று தன்னையே தியாகம் செய்யும் ஒரு சுதேசியாக இருந்த எனது பாரதி என்றுமே தனது தாய்மொழி மீது பற்றுக் கொண்ட அதேசமயம் முற்போக்குக் கருத்துக்கள் கொண்ட ஒருவராகத் திகழ்ந்திருக்கிறார், என்பதுவே தீர்க்கமான உண்மை. அவர் எப்போதுமே ஓர் மொழிவெறியனாக நடந்து கொண்டது இல்லை.

இதோ மீண்டும் அவரது ஓர் இனிய கவிதையைப் பார்ப்போம்

கீழே வரும் கவிதை பாரதியாரின் ஒரு பெரிய கவிதையில் சிறிய பகுதி.

தன்னைப் பற்றித்தானே அலசுகிற ஒரு பாங்கு, இங்கே அவரது கவித்தி றமும், தீஞ்சுடரான அறிவும் கொழுந்து விட்டெரிவதைக் காணலாம்.

ஆண்டோர் பத்தினில் ஆடியும் ஓடியும் ஆறு
குட்டையின் நீச்சினும் பேச்சினும் ஈண்டு
பன்மரத் தேறியி றங்கியும் என்னோ டொத்த
சிறியர் இருப்பரால் வேண்டு தந்தை விதிப்பி
னுக் கஞ்சியான் வீதி யாட்டங்க ளேதினுங்
கூடிலேன் தூண்டு நூற்கணத் தோடு
தனியனாய்த் தோழ மைபிறி தின்றி வருந்தினன்

பத்து வயதினிலே மற்றச் சிறுவர்கள் ஆடி, ஓடி குளத்தில் நீந்தி, பேசி மகிழ்ந்து மரங்களில் ஏறி விளையாடுவார். ஆனால் என் தந்தையின் கண்டிப்புக்குப் பயந்து ஊர் உலகில் உள்ள மற்றைய சிறுவர்களோடு சேர்ந்து விளையாடமல் நான் தனியனாகவே வாழ்ந்தேன் "

பார்த்தீர்களா ? எப்படி பாரதியார் தன் சிறுபிராயத்து ஏக்கத்தை எமக்கு எடுதுரைக்கிறார்

தொகுப்பு: சக்தி சக்திதாசன்

## சிறுகதை...சுதந்திரத்தின் நிழலில்

ஜன்னல் வழியாக காலைச் சூரிய ஒளி மேகலாவின் கண்களைக் குத்தியது, கண்ணைத் திறந்து மெல்லப் பார்த்தாள். ஆமாம் இரவு விடிந்து விட்டது. தெருவெல்லாம் காலை நேர ஆரவாரங்கள், வாகனங்களின் ஹார்ன் ஒலிகள். " தண்ணி வந்திடுச்சா" என்று அந்த பிளாக்கிலுள்ள வீடுகளிலிருந்து வெளிப்படும் காலைக் கீர்த்தனங்கள், அவளுக்கு அது மற்றுமோர் சாதாரணக் காலை என்று ஞாபகமூட்டியது.

ஆனால் இன்று ஏதோ ஒரு வித்தியாசம். ஓ! வேலைக்கு போகத் தேவையில்லை இன்று விடுமுறையல்லவா. இந்தியாவின் சுதந்திர தினம். அண்ணல் காந்தியின் அரும் பெரும் போராட்டம், எத்தனையோ தியாகிகளின் வீர மரணங்களும் தியாகங்களும் இந்தியாவுக்கு வாங்கிக் கொடுத்த விலை மதிப்பற்ற சுதந்திரத்தின் கொண்டாட்டமல்லவா?

வழமை போல அவளது அப்பா, அந்தக் கிராமத்தின் மையத்தில் சமுதாயத்தில் பெரிய மனிதர் என்னும் அங்கவஸ்திரத்துடன் இந்தியாவின் கொடியை ஏற்றுவார். சுற்றிவர அவள் அம்மா சகிதம், கிராமத்து பள்ளிக்கூடப் பிள்ளைகள் தேசிய கீதத்தைப் பாடியதும், கொடிக்கு வணக்கம் சொல்லி அனைவருக்கு இனிப்பு வழங்கப்படும்.

வருடம்தோறும் நடைபெறும் இந்த ஒரு நிகழ்வுக்காகவே தன்னுடைய வாழ்வு



என்பது போல அப்பா ஆவலுடன் காத்திருந்து விழாவை நடத்துவார். ஆனால் ஒரேயொரு வித்தியாசம் கடந்த மூன்று வருடங்களாக அந்தக் குடும்பத்தில் மூத்தவளான அவள் அவர் அருகே இருக்கவில்லை. அவரும் நேரிடையாக வந்தும் தொலைபேசியிலும் அவளது தம்பி தங்கையூடாகவும் எத்தனையோ முறை அழைத்துப் பார்த்துவிட்டார்.

மேகலாவோ பிடிவாதமாக மறுத்து விட்டாள். கடைசியாக அவர் கடந்த வருடம் வந்திருந்தபோது நடந்த சம்பாஷணை, அவளது நினைவுக்கு வந்தது:

"மேகலா, ஏம்மா பிடிவாதம்? இம்முறையாவது சுதந்திர தினத்துக்குக் கிராமத்துக்கு வரக்கூடாதா?" மிகவும் பரிதாபமாகத்தான் இருந்தது அவர் கேட்டது.

"இல்லப்பா, விட்டிருங்க. எனக்கு இஷ்டமில்ல" என்றாள் மேகலா தீர்மானமாக.

"இருந்தாலும் உனக்கு ரொம்பத்தான் பிடிவாதம், கொஞ்சம் விட்டுக் கொடுக்கணும் என்று தோணல்லியா?" அப்பாவின் குரலில் கொஞ்சம் காரம் தொனித்தது.

"அப்பா, எத்தனை வாட்டி சொல்றது. சுதந்திரம் என்னு கொண்டாடுறது வெறும் கண்துடைப்பே. தனிப்பட்ட மனுசங்களுக்கு தங்களோட ஆசைப்படி நடக்க முடியல்லேன்னா,

அப்புறம் என்ன சுதந்திரம் வேண்டிக் கிடக்குது" அவளின் குரலில் பொதிந்திருந்த முடிவான கருத்தை மாற்ற முடியாதெனப் புரிந்து கொண்டவாராய் தனியனாகவே கிராமத்துக்கு அப்பா திரும்பினார்.

படுக்கையிலிருந்து எழும்பிக் குளியலறையை நோக்கி நடந்தாள் மேகலா. விடுமுறை என்றால் என்ன? வேலைநாள் என்றால் என்ன ? வித்தியாசம் ஏதும் இருப்பதாக அவளுக்குத் தெரியவில்லை. இன்று என்ன செய்யப் போகிறோம் என்று எண்ணியவாறே குளித்தாள்.

நண்பன் ரமேஷுக்கு போன் போட்டுப் பார்ப்போம், அவன் இருந்தால் ஏதாவது சினிமாவுக்கு போகலாம் என்று எண்ணிக்கொண்டே தனது உடைகளைத் தெரிவு செய்வதற்காக பீரோவைத் திறந்தாள், அப்போது உடைகளுக்கடியில் புதைந்திருந்த தாலி அவள் கண்களில் பட்டது. அப்படியே திரும்பிச் சென்று அருகிலி ருந்த நாற்காலியில் சாய்ந்தவள் மனம், மீண்டும் கிராமத்துக்குத் தாவிற்று.

அவளுடைய கன்னிப் பருவத்தின் மகிழ்ச்சியின் ஆரம்பமும் அங்குதான்; அதன் முடிவும் அங்குதான்.
இயற்கையின் அழகு பூத்துக் குலுங்கும் கிராமம் அவளது கிராமம். அழகான பச்சை வயல்களின் வரப்புகளில் தன்னை மறந்து அவள் நடந்த காலங்கள் நெஞ்சை நனைத்தன. பச்சைப் பசேலென அடர்த்தியாக படர்ந்திருக்கும் பெரிய மரக் கிளைகளி ல் தமது வாழ்வை அமைத்துக்கொண்டு, வாழும் கிளிகள். அந்தக் கிளிகளைப் போல பேசவும், அந்தக் குயில்களைப் போல பாடவும், அந்த முயல்களைப் போல பாயவும் அவள் மனம் ஏங்கித் தவிக்கும். அவற்றின் சுதந்திரம் அவளது மனத்தை நிறைக்கும்.

அந்தக் கிராமத்தில் அநேகருக்கு இருந்த கட்டுப்பாடுகள் மேகலாவுக்கு இருக்கவில்லை. அவளின் முடிவுகளில் அவளது பெற்றோருக்கு நம்பிக்கையி ருந்தது. குடும்பத்தில் மூத்தவளான அவளின் ஆர்வமும் படிப்பில் இருந்த திறமையும் அவள் தமது குடும்பத்தில் மூத்தவள் என்னும் மதிப்பைக் கொடுத்ததேயொழிய, அவள் ஒரு பெண் என்கிற நினைப்பில் கட்டுப்பாடுகளை விதிக்கத் தலைப்படவில்லை. அந்தச் சூழ்நிலை அவளது சுதந்திர எண்ணங்களுக்கு நீருற்றி வளர்த்தது.

அதே ஊரில், அவளோடு சிறுவயது முதல் ஒன்றாகப் படித்து வந்தவன்தான் ராமு. அவனைத் தன்னோடு படிக்கும் சக வயது மாணவன் என்னும் நோக்கத்திலின்றி வேறு வடிவத்தில் பார்க்கவில்லை மேகலா.

காதலைப் பற்றி அவளுக்கு இருந்த கணிப்பே வித்தியாசமானது. திருமணம் என்பது இருமனங்கள் ஒன்றாக இணைந்து, நட்பு என்னும் அத்திவாரத்தில் வளர்ந்து நடைபெறா விட்டால், இருவருக்கிடையில் போடப்படும் விலங்கு என்பதே அவளது கருத்தாக இருந்தது.
மேகலா சிறுமியாக இருந்த போது அவளைத் தன் மடியில் வைத்துக்கொண்டு, தன்னுடைய கன்னிப் பருவத்துக் கனவுகளை அவள் அம்மா

கூறும்போது அதை உள்வாங்கிய மேகலாவிற்கு, தான் கன்னிப் பருவத்தை அடைந்த போதுதான், தன்னுடைய அம்மா அவளுடைய கனவுகளை, அவளுடைய பெற்றோரை மகிழ்விக்கும் ஒரே காரணத்திற்காக அடகு வைத்து விட்டாள் என்பது தெரிந்தது.

அவளுடைய திருமண வாழ்க்கையைப் பற்றிய கருத்துக் கணிப்பை வகுத்துக்கொள்ள தன்னுடைய அம்மாவின் வாழ்க்கையையே படிப்பினையாக எடுத்துக் கொண்டாள் மேகலா.

சென்னையில் தனது பட்டப் படிப்பை தொடர்ந்தாள் மேகலா. அதே பல்கலைக்கழகத்தில் பொறியியல் துறையில் பட்டப் படிப்பை மேற்கொண்டிருந்தான் ராமு. அவர்களுடைய பல்கலைக்கழகத்தின் கலைவிழாவில் நடந்த ஒரு நிகழ்ச்சி யின் போதுதான் அவளது கவனம், ராமுவின் பக்கம் திரும்பியது.

அன்றைய பட்டிமன்றம் "பெண்களின் சுதந்திரம் அன்றும் இன்றும்" என்னும் தலைப்பில் நடைபெற்றது. அதில் இன்றைய பெண்களின் சுதந்திரம் அன்றைய காலத்திலிருந்து அதிகம் மாறுபடவில்லை. பெண்கள் இன்னும் கட்டுப்படுத்தப்பட்டே இருக்கிறார்கள் என்னும் வாதத்திற்கு ராமு தலைமை தாங்கினான்.

ராமுவின் பேச்சு, அவளைக் கவர்ந்தது. ஒரு ஆணும் பெண்ணும் எந்த அடிப்படை உறவில் கணவன், மனைவி யாக வேண்டும் என்பதில் அவளுக்கிருந்த கருத்தை ராமு அப்படியே பிரதிபலித்தான். அதிசயித்துவிட்டாள் மேகலா. இத்தகைய ஒரு முற்போக்குச் சிந்தனையாளன் என்னுடன், என் கிராமத்தில் படிக்கும் போது அவனுடன் பழகாமல் விட்டு விட்டோமே, என்று அவள் மனம் வருந்துமளவுக்கு ராமு அவள் மனத்தில் இடம் பிடித்து விட்டான்.

அடுத்த நாள் காண்டீனில் "நேற்று உங்க வாதம் ரொம்பப் பிரமாதமா இருந்துது" என்று ஆரம்பமான அவர்களது உறவு, நாளுக்கு நாள் வளர்ந்தது. அந்த உறவின் வள்ர்ச்சியில் ராமுவின் மீது அவளுக்கு இருந்த மதிப்பு பன்மடங்காயிற்று, நட்பு இன்னும் கனிந்து காதலாக மலர்ந்தது.

இருவரும் பட்டப் படிப்பை முடித்துச் சென்னையிலேயே வேலைக்கு அமர்ந்தார்கள். மேகலாவுடைய வேலை முன்னேற்றங்களில் அதிக அக்கறை எடுத்தான் ராமு. எந்தெந்த வகையில் அவளுக்கு உதவியாக இருக்கமுடியுமோ அப்படி இருந்தான். மேகலாவிற்கோ தனது கனவுகளுக்கமைய ஒரு கணவன் அமையப் போகின்றான் என்ற பெருமை உள்ளத்தை நிறைத்தது.

அன்றொரு நாள் இருவரும் மகாபலிபுரம் போவதாகப் பல நாட்களுக்கு முன்னதாகவே ஏற்பாடு பண்ணியிருந்தார்கள். மிகவும் ஆவலோடு ஏற்பாடுகளைச் செய்தான் ராமு. முதல் நாள் இரவு மிகவும் தயங்கியபடி மேகலா "ராமு நாளை முக்கியமான ஆபிஸ் விஷயமாக எனது பாஸ் ஸ்ரீராமுடன் நான் கோயம்புத்தூர் செல்லவேண்டும், ஸாரி.... ரொம்ப ஏமாத்தமா இருக்கா?" என்றாள்.

புன்னகைத்தான் ராமு. "என்ன மேகலா, உனது ஆபிஸ் விஷயம் உனக்கு எவ்வளவு முக்கியம் என்பது எனக்குத் தெரியாதா? நாமதான் வாழ்க்கை பூரா சேர்ந்திருக்கப் போறோமே! மகாபலிபுரத்துக்கு இன்னொரு நாள் போயிட்டாப் போச்சு. இதுக்குப் போய் ஏன் இவ்வளவு தயக்கம்?" என்றது, மேகலாவின் கண்களில் நீர் பனித்தது. இவன் அல்லவா காவியக் காதலன் என்று எண்ணிக்கொண்டாள்.

அப்போதுதான் இருவரது குடும்பத்தி லும் திருமணப் பேச்சு எழுந்தது. இரு குடும்பத்தினருமே காதலுக்குப் பச்சைக் கொடி காட்டிவிட்டார்கள். ஒரே கிராமம். ஒருவரை ஒருவர் நன்றாக அறிந்த குடும்பங்கள். பொருளாதாரத்திலும் ஒருவருக்கொருவர் குறைந்தவரல்ல, திருமண ஏற்பாடுகள் தடபுடலாக நடந்து, மேகலாவின் கழுத்தில் தாலி கட்டினான் ராமு.

சென்னையில் அவர்களது குடும்ப வாழ்க்கை சிறப்பாக ஆரம்பித்தது. இருவருமே மிகவும் நல்ல வேலையில் அமர்ந்திருந்தார்கள். அப்போது மேகலாவிற்கு அலுவலகத்தில் பதவி உயர்வு கிடைத்தது, அவளுடைய நிறுவனத்தின் சென்னைக் கிளை மேலாளராக அவள் உயர்ந்தாள். வேலைப் பளுவும் கூடியது. அலுவலகத்திலிருந்து அவள் வீடு திரும்பும் நேரம் மெல்ல, மெல்லப் பிந்தியது.

ராமுவின் சிநேகச் சுபாவமும் மெல்ல, மெல்ல மாறியது. ஏன் தாமதமாக வருகிறாய் என்று மெதுவாகக் கேட்க ஆரம்பித்தான். மாறுதல்களை அனுசரிக்கும் மட்டும் கொஞ்சம் நாளெடுக்கும் எனத் தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொண்டாள் மேகலா.

எரியும் விளக்கில் எண்ணெய் வார்க்கும் நிகழ்வாக, ராமுவின் பெற்றோர்கள் ஒரு மாதம் சென்னையில் அவர்களுடன் தங்கி னார்கள். குழந்தை பெறுவது பற்றிய பேச்சு அடிக்கடி எழுந்தது. ராமுவின் பெற்றோர்களைப் பொறுத்தவரை கலியாணத்திற்கு அடுத்தது குழந்தை என்பது ஒரு விதியாகவே இருந்தது. ஆனால் அவர்களுடன் ராமுவும் சேர்ந்ததுதான் அவளுக்கு ஆத்திரமாக இருந்தது.

திருமணத்திற்கு முன்பு ஒருநாள் "எனது வாழ்க்கையில் பல லட்சியங்களில் நான் பணிபுரியும் இடத்தில் மிகவும் உயர்ந்த நிலையை அடையும் வரை, குழந்தைப் பேற்றைப் பற்றி நினைக்க எனக்கு நேரமில்லை. ஏனெனில் நிறவேறாத கனவுகளின் தாக்கம், குழந்தையின் வளர்ப்பைப் பாதிக்கக் கூடாது" என்று சொன்ன மேகலாவிடம்,
"மேகலா எதையுமே கணவனோ சரி, மனைவியோ சரி கலந்து பேசி ஒருவர் லட்சியத்துக்கு மற்றவர் துணையாகும் ஒரு உறவு முறையே உண்மையான உறவு முறையாகும்" என்று சொன்ன அதே ராமுவா இவன் என்று அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ராமுவின் பெற்றோர் திரும்பிக் கிராமத்துக்கு சென்ற பின்னர் ராமுவின் கட்டுப்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கின. எதற்கும் கேள்விகள் கேட்கத் தொடங்கினான். அவள் அலுவலகத்தில்தான் இருக்கிறாளா என்று அடிக்கடி தொலைபேசி செய்து பார்த்துக்கொண்டான். அதைப் பற்றி அவளது அலுவலகத்திலேயே ஒரு மாதிரியாகப் பேசிக்கொள்ள ஆரம்பித்து விட்டார்கள்.

ஒரு மத்தியானம் சாப்பிடுவதற்காக தனது தோழியுடன் ரெஸ்டாரண்டில் நுழைந்த மேகலாவின் கண்களில், அங்கே ஒரு பெண்ணின் முன்னே உட்கார்ந்து சிரித்தபடியே உணவருந்திக் கொண்டிருந்த ராமுவே தென்பட்டான்.
கொஞ்சம் தடுமாற்றம் அடைந்தாலும் தன்னைச் சுதாரித்துக் கொண்டு ராமுவின் கண்களில் தட்டுப்படாமல் ஓர் ஓரத்தில் அமர்ந்துகொண்டாள்.

அவளது தோழி மாலதி "என்னடி மேகலா, அங்கே உட்கார்ந்திருப்பது உன் கணவனல்லவா?" என்றாள்

அதற்கு மேகலா "ஆமா" என்றாள்.

"என்னடி அவர் வேறு யாரோ ஒரு பெண்ணுடன் உட்கார்ந்திருக்கிறாரே, நீயோ ரொம்பச் சாதாரணமாக அமர்ந்திருக்கிறாய் எப்படி?" என்றாள் ஆச்சரியத்துடன்.

"மாலதி ஒருவரையொருவர் புரி ந்துகொள்ளாதவர்களுக்கு இடையி ல்தான் சந்தேகம் தோன்றும். எனக்கு என் கணவரைப் பற்றித் தெரியும், அது அவருடைய அலுவலகத்தில் வேலை செய்பவராக இருக்கலாம்" என்றாள் மி கவும் தெளிவுடன்.

பில்லைக் கட்டி விட்டு வெளியே புறப்படத் தயாரான ராமுவின் கண்களில் மேகலா தட்டுப்பட்டாள், அவளை நோக்கி வந்த அவன், "ஏது மேகலா இவ்வளவு தூரம்?" என்றான்.

"மாலதியைப் பார்க்க வந்தேன். அப்படியே சாப்பிடப் போகலாம் என்றாள் அதுதான்" மேகலா அமைதியாக பதிலளித்தாள்.

"மீட் மை வைஃவ் மேகலா?" என்று தன்னுடன் வந்திருந்தவளுக்கு அறிமுகப்படுத்திவிட்டு, "இது மீனா, என்னோட கிளையண்ட்" என்று தன்னுடன் வந்திருந்தவளை அறிமுகப்படுத்தினான்.

அவர்கள் போன பின்பு மாலதி அவளைப் பார்த்து "என்ன இருந்தாலும் உன்னோட மனத்தெளிவைப் பாராட்டுறேன் மேகலா" என்றாள். அவளை ஒரு அர்த்தம் பொதிந்த பார்வை பார்த்தாள் மேகலா.

ஆனால் கொஞ்சம், கொஞ்சமாக சந்தேகம் என்னும் வியாதியால் பாதிக்கப்பட்ட ராமுவோ மாறுவதாகத் தெரியவில்லை. அத்தோடு வேலையில் மேகலா அடையும் முன்னேற்றங்கள் அவனுக்கு பொறாமையைக் கொடுத்தன. அவள் வேலைக்கு போவதே கூடாது என்கிற பாவனையில் நடக்க ஆரம்பித்தான். அனைத்தையும் ஓரளவுக்குச் சமாளித்து நடந்தாள் மேகலா. திடீரென ஒருநாள் அவளது குடும்பமே அங்கு வந்திறங்கியது. அன்றிரவு தூங்கப் போகும்வரை அப்பா, அம்மா இருவரும் அவளுக்கு மாறி, மாறி அறிவுரை கூறத் தொடங்கினார்கள்.

"மேகலா, என்னதான் சுதந்திரமாக இருந்தாலும் கலியாணத்துக்கு அப்புறம் கணவனின் விருப்பப்படிதான் நடக்கணும் அம்மா, இல்லாட்டா நம்ப சமுதாயம் நம்மைப் பத்தி பிழையாகப் பேசத் தொடங்கிடும் பாத்துக்க" என்றார் அப்பா.

"அப்பா எனக்கிருக்கும் திறமையை நல்ல வழியில் பயன்படுத்தி முன்னேறுவது எந்த வகையில சமுதாயத்தைப் பாதிக்கப் போகிறது. கலியாணம் பண்ணினா பெண்கள் கூண்டுக் கிளிகளாக மாற வேண்டியது தானா? என்னுடைய தொழில் வாழ்க்கையை மேம்படுத்திக்கொள்வதைத் தவிர நான் வேறு எந்த வகையில், என் கணவனுக்குப் பிடிக்காத வகையில் நடந்துகொண்டேன்" என்று வாதாடிய மேகலாவின் வாதத்தில் இருந்த நியாயத்தை மறுக்க முடியாத அவளது குடும்பம் சிறிது நாட்களில் கிராமம் திரும்பினார்கள்.

தனக்குத் தெரியாமல் தனது குடும்பத்துக்குத் தன்னைப் பற்றி அறிவித்துவிட்டானே என்னும் ஆதங்கம் ராமுவின் மீது ஏற்பட்டாலும் பொறுத்துக்கொண்டு நடக்கலானாள். ஒருநாள் அவள் எம்.டி ஸ்ரீதருடன் வெளியே செல்ல வேண்டி வந்தது, அவர்களின் கார் ரிப்பேர் ஆனதால் இரவு 10 மணிக்குத்தான் வீடு வந்து சேர்ந்தாள். ஹாலில் உட்கார்ந்திருந்த ராமு "என்ன இவ்வளவு நேரம்" என்றான்," அதுதான் கார் ரிப்பேர் என்று அப்போதே போன் பண்ணியிருந்தேனே" என்றாள். "அதுக்கு இவ்வளவு நேரம் ஆகுமா?" மீண்டும் சந்தேகத்துடன் தொனித்தது ராமுவின் குரல். "எத்தனை வாட்டி திரும்பத் திரும்பச் சொல்றது, அதுதான் காரணம்" இப்போ மேகலாவின் குரலில் கொஞ்சம் ஆத்திரம் தெரிந்தது. "செய்யுறதையும் செய்துட்டு, அப்புறம் என்னடி கோபம்?" சூடேறியது ராமுவின் குரலில். "கலியாணமாகாத இளம் எம்.டி.யுடன் ஊரெல்லாம் சுத்தி வந்தா கார் ரிப்பேர் ஆகாம என்ன நடக்கும்?" கோபத்துடன்.

"அன்னைக்கு உங்களை ரெஸ்டாரண்டில் ஒரு பெண்ணோட சந்திச்ச போது, நான் சந்தேகப்பட்டேனா? இல்லை அதைப் பத்தி ஒரு வாட்டியாவது கேட்டேனா? கலியாணத்துக்கு முன்னால எப்படி இருந்தீங்க, மகாபலிபுரம் பயணம் ரத்தானபோது எத்தனை அன்பாக நடந்தீங்க?" என்ற மேகலாவைப் பார்த்து,

"அப்போ நான் உன்னோட காதலன், இப்போ கணவன்" என்றான் ராமு.
திகைத்துப் போன மேகலா "என்னங்க வித்தியாசம்?" என்றாள்.
"அப்போ உனக்கு ஏதாவது ஏடாகூடமாக நடந்திருந்தா நான் என்னோட வழியில போயிருக்கலாம், ஆனா இப்போ சமுதாயத்துல என்னோட பேர் கெட்டிடும்" என்றான் ராமு.
தன் காதுகளையே நம்ப
தன் காதுகளையே நம்ப முடியாதவளாக "என்னங்க சமுதாயம், பெண்களின் மீது போட்டிருக்கும் வேலி அது, இதுன்னு அந்தப் பட்டிமன்றத்துல வெளுத்து வாங்கினப்போ..." முடிக்கவில்லை மேகலா, "அது வெறும் கைதட்டுதலுக்காகப் பேசியது. ஆனா, இது என்னோட வாழ்க்கை. உண்மையான வாழ்க்கையில ஒரு பெண் தன்னோட கணவனுக்குக் கட்டுப்பட்டுத்தான் வாழணும், ஏன் உன்னோட அம்மாவையே பாத்துக்கோயேன். எப்பவாவது அப்பா கிழிச்ச கோட்டைத் தாண்டியிருக்கிறாங்களா?" ஏளனமாகப் பார்த்தான் ராமு.

"நீங்க சொல்ற கட்டுப்பாடு ஒழுக்கத்துல இருந்தால் சரி, என்னோட முன்னேற்றத்தைத் தடைப்படுத்தத் தேவையில்லை" மேலும் மேகலாவின் நியாயத்தை மறுக்க முடியாதவனாக, "போதும்டி வாயை மூடிக்கொண்டு போய்ப் படு" என்றான் ராமு.
அன்று முழுவதும் தூக்கம் வராமல் புரண்டாள் மேகலா.

அடுத்த நாள் அலுவலகத்திற்குப் போனாள். அன்று எம்.டி ஸ்ரீதர் வரவில்லை, ஏதோ ஒருவாறு அன்றைய தினத்தை ஓட்டிவிட்டு வீடு வந்து சேர்ந்தாள். ராமு சீக்கிரம் வந்து தனது நேற்றைய நடப்புக்கு மன்னிப்புக் கேட்பான் என்று எதிர்பார்த்தாள். மிகவும் தாமதாமாக வீடு வந்தவன் "என்ன இன்னைக்கு காதலனைக் காண முடியவில்லையோ" என்று ஏளனமாகக் கேட்டதும் மிகவும் மனமுடைந்து போனாள்.

அடுத்தநாள் அலுவலகத்தில் எம்.டி. கூப்பிடவும் அவரைச் சந்திக்கச் சென்றாள். "மேகலா என்ன உன்னோட ஹஸ்பண்ட் ரொம்ப இண்டீசண்ட் ஆக நடந்துகிட்டார். என்னையும் உன்னையும் சேத்து ஏதேதோ எல்லாம் கற்பனை பண்ணி என்னுடைய வீட்டுக்கு நேத்து வந்து ரொம்ப ரகளை பண்ணிட்டார். என்னோட பேரண்ட்ஸ் சரியா ஃபீல் பண்ணினாங்க" என்றார்.

திடுக்கிட்டுப் போன மேகலா "சாரி சார், என்னை மன்னிச்சுடுங்க" என்றவளைப் பார்த்து "நான் உன்னைப் பார்த்து வருத்தப்படறேன். நீ ரொம்ப கெட்டிக்காரப் பொண்ணு. ஆனா உன்னோட கணவன் இப்படியே இருந்தான்னா, நீ வேலையா, வீடா என்னு இரண்டுல ஒன்னு தேர்ந்தெடுத்தாகணும். நம்ப நாட்டுல எத்தனையோ பொண்ணுங்க வாழ்க்கை இப்பபடித்தான் இருக்கு. எவ்வளவோ கஷ்டப்பட்டு படிக்கிறாங்க. அப்புறம் குடும்ப வாழ்க்கைக்கு தங்களோட தொழிலைப் பணயம் வைச்சுடுறாங்க. என்னதான் நாட்டுக்குச் சுதந்திரம் கிடைச்சாலும், நம்மோட சிந்தனை இன்னும் அடிமையாய்த்தான் இருக்கு, நாம் என்ன செய்ய முடியும்? ....ம்" என்று பெருமூச்செறிந்தான். அன்று வேலை முடிந்ததும், கடற்கரையில் அமர்ந்திருந்து பலமணி நேரம் சிந்தித்தவள் வீட்டுக்கு வந்ததும், தனது பெட்டியைக் கட்டிக்கொண்டு கிளம்பினாள்.

"எங்கே கிளம்பிட்டே, காதலன் கி ட்டேயா" பொரிந்தான் ராமு.

"இல்லை என்னை அடைச்சிருக்கும் கூண்டில இருந்து விடுதலையாகிப் போறேன்," என்றவாறு தனது கழுத்தி லிருந்த தாலியைக் கழற்றினாள்.

" அவ்வளவு துணிச்சலா போறியா, தாலி என்னும் வேலியையே கழட்டுறியா, இனிமேல் இந்தப் படியேறினே காலை முறிச்சுடுவேன்" கத்தினான் ராமு.

"தாலி, ஒரு கொடி படறுதற்கு உதவி யாக இருக்கும் வேலியாக இருக்கணுமே தவிர, அந்தக் கொடியையே அழித்து விடும் முள்வேலியாக மாறக் கூடாது " என்றவாறு அந்தப் படிக்கட்டைத் தாண்டினாள்.

ரமேஷ் வீட்டை நோக்கி ஆட்டோ வில் போய்க்கொண்டிருந்த அவள் அங்கே ஒரு அரசியல் மேடையைக் கடந்தாள். அதிலே ஒருவர் முழங்கி க்கொண்டிருந்தார் "அண்ணல் காந்தி வாங்கித் தந்த அளப்பற்ற சுதந்திரம், பாரதி கனவு கண்ட ஆனந்தச் சுதந்தி ரம்" அடுக்கிக்கொண்டே போனார். சுதந்திரத்தின் நிழலிருந்து கைதட்டிக்கொண்டிருந்த கூட்டத்தின் சிந்தனைகள் மட்டும் இன்னும் சுதந்தி ரமாகவில்லை. மேகலாவின் வதனத்திலே ஒரு மெல்லிய முறுவல் படர்ந்தது.

ஆக்கம்: சக்தி சக்திதாசன்

சிஃபி தமிழ், இந்திய 60வது சுதந்திர தின இணையச்சிறப்பிதழில் வெளியான சிறுகதை

# பொன்விழாக் கண்ட கவிஞர் வாலி



கவிதை செய்வோர் பலரும் கண்களில் கண்ணீருடன் வாழும் நிலைதான் இப் பாரினில் அரும்பெரும் புலவன் பாட்டன் பாரதி காலந்தொட்டு நடந்திடும் நிகழ்வு. இது காலம் நமக்குப் போதித்த கசப்பான பாடம். இப்படிக் கவிஞனாக வாழ்வதே கடினமான சூழ்நிலையில், தமிழகத்தில் தனக்கென தனியான ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டு, எதுவித ஆரவாரமுமில்லாமலே தமிழ்த் திரையுலகில் பாடலாசிரியாராக ஐம்பது பொன்னான வருடங்களைக் கடந்து விட்ட சாதனையாளர் நமது அன்புநிறைக் கவிஞர் வாலி அவர்கள்.

இந்த ஐம்பது வருடகாலத்தை அவர் மிகவும் இலகுவாகக் கடந்து வந்தவர் என்று சொல்வது உண்மையாகாது. எத்தனையோ கடினமான கற்பாதைகளையும் தனது அபாரமான நம்பிக்கையாலும், திறமையாலும் பண்புநிறைக் குணத்தாலும் பூம்பாதைகளாக மாற்றிக் கடந்தவர் கவிஞர் வாலி அவர்கள் என்று சொன்னால் மிகையாகாது.

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத்தெரியாதவர், எதையும் வெளிப்படையாகப் பேசிவிடும் உன்னத குணத்தை உரித்தாகக் கொண்டவர். இவைகள் இந்த உன்னதத் தமிழ்க்கவியின் உயர்ந்த குணங்களில் சில.
ஒரு பத்து வருடகாலத்தை ஒரு தலைமுறைக்காலம் என்பது வழமை. அப்படி ஐந்து பத்து வருடங்களுக்கூடாக தமிழ்த்திரையுலகில் தன்னை நிலைப்படுத்திக் கொண்டிருப்பவர் என்றால் இவரது அபாரமான திறமை எமக்குப் புரியும்.

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் காலத்திலிருந்து இளைய தளபதி விஜய் காலம் வரை தொடர்ந்து தமிழ்ப்படங்களுக்கு பாடல் எழுதிக் கொண்டிருப்பவர் கவிஞர் வாலி.

காலம் கனவேகத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது. மக்களின் ரசனைகளும் அதற்கேற்ப அதேவேகத்தில் மாறிக் கொண்டே போகிறது. 1957ம் ஆண்டு ஒரு இளம் மனதில் பதியக் கூடிய பாடலுக்கும், 2007ம் ஆண்டு ஒரு இளம் மனதில் பதியக்கூடிய பாடலுக்கும் பல மாற்றங்கள் கருத்து முதற்கொண்டு இசைவரை உண்டு.

அத்தனை மாற்றங்களையும் தனது மனதில் மிகவும் அமைதியாக உள்வாங்கிக் கொண்டு அந்தந்தக் காலங்களுக்கேற்ப அற்புதமான

பாடல்களை எமக்குத் தந்த அற்புதக் கவிஞர் வாலி அவர்கள்.

காலில்லாக் காரணத்தால்
கடிகாரம் ஓடாதா ?
வாலில்லாக் காரணத்தால் நான்
வாலியாக முடியாதா ?

என்று சிறுவயதிலேயே சந்தம் பொதிந்த வார்த்தைகளைக் கோர்த்து தனது பள்ளி ஆசிரியர் மனதைக் கொள்ளை கொண்ட ஸ்ரீரங்கத்தில் விழுந்த ரங்கராஜன் என்னும் என்னும் சிறுவிதை தான் "வாலி" என்னும் ஆலவிருட்சமாக இன்று தமிழகத் திரைவானில், இலக்கிய உலகில் விரிந்து தமிழ் உள்ளங்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கிறது.

திரைப்படப்பாடல்கள் மட்டுமல்ல அவரது இலக்கியம் செறிந்த கவிதைகள், ஆழ்ந்த தமிழறிவை புடம் போட்டுக் காட்டிக் கொண்டிருக்கிறது

காலக்கணிதத்தை சரிவரப் புரிந்து கொண்டு தன்னை மாற்றங்களுக்குள்ளாக்கிக் கொள்கின்றவனே உண்மையான கவிஞன் என்று கவியரசர் கண்ணதாசன் கூறியதைப் போல, காலமாற்றங்களுக்குள்ளாகியும் தனது கவித்திறனை இறுகப்பற்றி காலத்தோடு மாறிக் கொண்ட இந்த உன்னதக் கவிஞரை, அவரது சினிமாப் பாட்டுக்களின் அடிப்படையில் விமர்சிப்பவர்கள் பலருண்டு.

ஆனால் அந்த விமர்சனங்களுக்கெல்லாம் ஒரே கவிதையில் பதில் சொல்கிறார் பாருங்கள்.

எந்தப்பா சினிமாவில்
எடுபடுமோ? விலைபெறுமோ?
அந்தப்பா எழுதுகின்றேன்;
என்தப்பா? நீர் சொல்லும்!

மோனை முகம் பார்த்து
முழங்கிடத்தான் முயற்சித்தால்
பானை முகம் பார்த்தென்
பத்தினியாள் பசித்திருப்பாள்;

கட்டுக்குள் அகப்படாமல்
கற்பனைச் சிறகடிக்கும்
சிட்டுக்கள் நீங்கள்;
சிறியேன் அப்படியா ?

மெட்டுக்குள் கருத்தரித்து
மெல்லவே இடுப்புநோகத்
தட்டுக்குள் தகுந்தவாறு
முட்டையிடும் பெட்டைக்கோழி!

எத்தனை அழகாகத் தன் நிலை சொல்லித் தமிழில் கவிதரும் இந்தக் கவிஞன் வாழும் காலத்தில் அவனுடைய பொன்விழாக் காணும் பாக்கியம் நாம் பெற்றோமென மனம் மகிழ்ந்து நாமாடும் வேளையிது.

இவரின் அருமையான தமிழ் பொதிந்த அற்புத பாடல் ஒன்றின் உதாரணம்

" மாதவிப் பொன்மயிலாள் தோகை விரித்தாள் " என்று ஆரம்பிக்கும் பாடலாகும். தமிழன்னையின் செல்வப்புதல்வன் இன்னும் பல ஆண்டுகள் நம்பிடையே வாழ்ந்து தமிழுக்கு பெருமை சேர்க்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

ஆக்கம் : சக்தி சக்திதாசன்

# ஏதாவது எழுதலாமே !



ஏதாவது எழுதலாமே என்று உட்கார்ந்தேன் . உள்ளத்துக்கும், உதட்டுக்கும் உள்ள இடைவெளியைப் பற்றி மனம் சிந்திக்கத் தலைப்பட்டது. உள்ளத்தில் எழுந்த எண்ணம் உதட்டின் வழியே வெளியே வருவதற்கு முன்னால் அது பலவிதமான மாற்றங்களுக்கு உள்ளாகிறது. எதை? எங்கே? எப்படி? பேசுவது என்பதை அலசி ஆராய்ந்து பேசுவதற்கு மனிதனுக்கு உண்மையாகவே அவகாசம் கிடைக்கிறதா?

உண்மையே பேசுவேன் என்னும் கொள்கையுள்ள மனிதன் வாழ்வில் ஒருபோதும் தான் பேச எண்ணியதை சிறிய அளவிலாவது மாற்றியமைத்திருக்க மாட்டானா? சிலபேரைப் பற்றிக் குறிப்பிடும்போது இவர் வெளிப்படையாகப் பேசும் மனிதர் என்று குறிப்பிடுகிறோம். மேறு சிலரைப் பற்றிக் குறிப்பிடும் போது இவர் கொஞ்சம் நாசூக்காகப் பேசும் மனிதர் என்கிறோம்.

வெளிப்படையாகப் பேசும் மனிதரின் உள்ளத்துக்கும், உதட்டுக்கும் உள்ள இடைவெளி, நாசூக்காகப் பேசும் மனிதரின் உள்ளத்துக்கும், உதட்டுக்கும் இடைவெளியை விடக் குறுகியதா?

சிலர் பேசும் போது மற்றவரின் மனம் புண்படும்படி பேசுகிறார்கள் என்று சொல்லக் கேட்டதுண்டு. அந்தப் புண்படும்படியாகப் பேசுபவரின் பேச்சு, புண்படக்கூடியதாக இருப்பது அதைக் கேட்பவரைப் பொறுத்ததா? அன்றி பேசுபவரைப் பொறுத்ததா? இங்கேதான் வேறுபாடுகளைப் புரிந்து கொள்ளும் அவசியம் ஏற்படுகிறது.

ஒருவன் தன் இயலாமையால் ஒரு காரியத்தைச் செய்ய முடியாமல் போய்விடும் போது அதை சுட்டிக்காட்டி பேசும்போது அதைக் கேட்பவனின் மனம் புண்படுவது நியாயம். ஆனால் தனது சோம்பேறித்தனத்தினால் ஒரு காரியத்தைச் செய்ய முடியாது போகும் பட்சத்தில் அதைச் சுட்டிக்காட்டி அவனை உணரப் பண்ணுவது, எப்படிப் புண்படச் செய்வதாகும்?

இங்கே தான் வெளிப்படையாகப் பேசும் மனிதருக்கு வீணான பெயர் கேட்கும் சந்தர்ப்பம் உருவாகிறது. வெளிப்படையாகப் பேசும் தன்மையினால் மற்றவருக்கு உதவி செய்ய எடுக்கும் முயற்சிகள் கூட அவர்களைப் புண்படுத்த எடுத்த முயற்சிகளாக தென்படுகின்றன.

எதையும் தெளிவாகப் கேட்டு அதன் உண்மையான அர்த்ததைப் புரிந்து கொள்ளப் பழகுவதே மனிதாபிமானத்தின் முதற்படி மனிதர்களைக் குறை கூறுவது, குற்றம் கண்டு பிடிப்பது சுலபம். ஏனெனில் நாமெல்லோருமே நமது உள்ளத்துக்கும், உதட்டுக்கும் உள்ள இடைவெளியின் தூர்த்தை மறந்து விடுகிறோம்.

ஆக்கம்: சக்தி சக்திதாசன்

# கவிதைத்தூறல்

இதோ மீண்டும் இரு இளங் கவிஞர்களின் கவிதைகளை உள்ளடக்கிய இந்தக் கவிதைத்தூறலில் நனைய ஆயத்தமா?

இளம் கவிதாயினி வீ.ராதிகாஅவர்களின் கவிதையொன்றைக் காண்கிறீர்கள்.

இல்லத்தரசி

இன்முகம் காட்டி
அறுசுவை அமுது செய்து
இனியகுணங்களால்
இல்லம் சமைப்பவள்

பிள்ளைக்குத் தாயாகி
பிணிக்கு செவிலியாகி
வலிக்கு மருந்தாகி
இருளுக்கு விளக்காகி
இல்லம் நிறைப்பவள்

மாலையில் விளக்கேற்றி
மங்களம் செய்திடுவாள்
மாறாத அன்புடனே
மக்களைப் போற்றிடுவாள்

மணவாளன் வரும் போது
மகிழ்வுடனே வரவேற்பாள்
பசி அறிந்து உணவிடுவாள்
பல கதையும் பேசிடுவாள்

அலுவலகக களைப்பு
அங்கம் வருத்தினாலும்
அயராது உழைப்பதுவே
அவளின் பெருஞ்சிறப்பு

படித்துப் பட்டம் பெற்றாலும்
பாமரப் பெண்ணாய் இருந்தாலும்
இல்லத்தின் அரசி அவளே
இல்லத்தின் அடிமையும் ஆவாள்
ஆம்
அவள் அன்புக்கு அடிமை
கொண்ட கடமைக்கு அடிமை

இல்லத்தின் பணிகளுக்கு முடிவுண்டா?
இவளுக்கு என்றேனும் விடுமுறையுண்டா??

வீ.ராதிகா (நன்றி: அன்புடன்)

இளம் கவிஞர் அராதா அவர்களின் சொற்சிலம்பம்.

கூண்டு

கூண்டுக்கு வெளியே
மனிதன் சொன்னான்...
நம் காட்சிக்காக
அடைபட்டு கிடக்குது
கூண்டுக்குள் மிருகங்கள்...

கூண்டுக்கு உள்ளிருந்து
மிருகம் சொன்னது...
பிறர் காட்சிக்காக
அடைபட்டு கிடக்குது
மனித மனங்கள்...!

அராதா. (நன்றி : அன்புடன்)

-----------------------------

உனக்குள் ஒளிந்திருக்கும்.....

உன்னுள்ளே
உனக்கே தெரியாமல்...
புதைந்து போயிருக்கும்
பழைய நினைவுகளைக்
பதமாய்க் கிளறிப்பார்....

மனிதா !

உன்னையறியாமலே
உலுப்பி விடப்படும்
உனக்குள் இருக்கும் மனிதம்
அப்போது.....
உனக்கே புரிந்துவிடும்
உண்மையின் வலு

சக்தி சக்திதாசன்

# அளக்கிறார் அரட்டை அய்யாத்துரை



இஞ்சாருங்கோ ! இந்த வருஷம் என்ன உப்பிடி அவசரமா ஓடிப்போயிட்டுது கண்டியளே ! உவன் தம்பி சக்தியும் ஏதோ இந்தா வருது, அந்தா வருது எண்டெல்லா இந்த தமிழ்ப்பூங்கா பேப்பரையும் கொஞ்சம் சுணக்கிப் போட்டான் பாருங்கோ ! அது அப்பிடி, இப்பிடி எண்டு 2008 எட்டுமெல்லே வந்திட்டுது. அவன் பாவம் என்ன செய்வான் தனிய ஒரு பேப்பரை அடிக்கிறது சும்மா லேசுப்பட்ட விசயமே ? அண்டைக்கு என்னட்ட வந்து " ஐயா இந்த இதழுக்கு ஏதாவது விஷேசமா எழுதுங்கோவன்" எண்டு கேட்டவன் கண்டியளே !

அதுசரி இந்தக் கிறீஸ்துமஸ் எண்டு எங்கட சனம் படுற பாட்டைப் பாத்தியளே ! ஒரே ஓட்டம் சாட்டமாத் திரிஞ்சுதுகள். அதுகளிண்ட பார்ட்டிகளும், கொண்டாட்டங்களும் கேக்க வேணுமே ? ஹி..... ஹி.... என்னையும் அங்க ரெண்டு, மூண்டு பார்ட்டிகளுக்கு கூப்பிட்டவைதான். நானும் போய்க் கொஞ்சம் இந்தக் குளிருக்கு ரெண்டு மூண்டு கிளாஸ் அடிச்சனான் பாருங்கோ...

அதில ஒரு பிழையில்லைக் கண்டியளே ! டாக்குத்தர் இந்தக் குளிருக்கு இடைக்கிடை கொஞ்சம் பிராந்தி குடிக்கச் சொல்லியிருக்கிறார். சரி அதை விடுங்கோ, தாய் தேப்பன் பிள்ளையளுக்கு சரியான விலை கூடின பொருளுகளையெல்லே பிரசண்ட் எண்டு வாங்கிக் குச்க்குதுகள். எனக்கும் உந்த பக்கத்து வீட்டில இருக்கிற பெடியள் ஒரு சேர்ட் வாங்கித் தந்ததுகள். அவங்கள் நல்லவங்கள் கண்டியளே !

அங்கை ஒரு இடத்துல பாத்தனான், வீடில்லாமத் திரியிற அதென்ன ஹோம்லெஸ் பீப்புளோ? அவங்களுக்கு ஏதோ சூப்பு, சாப்பாடு எல்லாம் குடுத்தவையாம். அதில எங்கடை சனம் ஒன்றிரண்டு நிண்டு ஏதோ கெல்ப் பண்ணினதுகள். ஏசூ மோன இங்க நிக்கிறாய் எண்டு கேக்க, அதுவோ அய்யா, சும்மா பார்ட்டி பிரசண்ட் எண்டு காசைப் போட்டுக் கொட்டுறதைவிட இப்பிடியான ஆக்களுக்குச் செய்யுறதுதான் உண்மையான கிறீஸ்துமஸ் பிரசண்ட் எண்டு சொல்லுதுகள் கண்டியளே!

அதுகளுக்குப் பைத்தியம் போல இருக்குது. சும்மா வேலையில்லாம மெனக்கிடுதுகள். தாங்களும் பார்ட்டி அது இது எண்டு கொஞ்சம் தண்ணியைக் கிண்ணியை அடிப்பம் எண்டு இல்லை... விசர்ப் பெடியள்.....
சரி இஞ்ச இந்த வேலை வெட்டி இல்லாததுகளைப் பற்றிக் கதைச்சது போதும், சன் டீவியில சீரியல் தொடங்கப் போகுது கெதியாப் போனாத்தான் பக்கத்து வீட்டில முன்னுக்கு இருக்கலாம்...ஹி...ஹி....ஹி.. வரட்டே...

(யாவும் கற்பனையே      ஆக்கம்: சக்தி சக்திதாசன்)

# <u>துருவ நட்சத்திரம்</u>

துருவநட்சத்திரத்தின் வழியாக எதை இங்கே இம்முறை துருவிப் பார்க்கிறோம்.



## <u>நீ புதிதா? புரியவில்லையே...</u>



இரவைப் பகலாக்கும்
வாணவேடிக்கைகள்
இதயத்தில் இனிப்பாக
இடையறா விருந்துகள்
இத்தனையும் உனக்காகவா?
ஏன் நீ புதிதாய் பிறந்தாய்
என்பதினாலா? புரியவில்லையே....

ஏங்கும் வாழ்க்கையே பரிசாய்
எத்தனை வருடங்களைக்
கண்டு விட்டான் என் இனிய
ஏழைத் தோழன்?
அவன் வாழ்வில் எதை நீ
புதிதாய்க் கொண்டு வந்தாய்?
பொருளாதாரம் பெருகிறதாம்..
பைத்தியக்காரன் ஒருவன்
பலமாய்க் கத்துகிறான்
பதுங்கிக் கொண்டே நுழைகிறாய்
புதிதாய் இங்கே என்ன தந்தாய் ?

இருப்பவன் உன் வரவைக்
கொண்டாடுகிறான்...
இல்லாதவன் உன் வரவால்
திண்டாடுகிறான்.....
ஆனால் நீ மட்டும்
விடாமல் வந்து கொண்டே....

சரி வந்ததுதான்
வந்து விட்டாய்.....
எங்கே கொஞ்சம்
இனியாவது அழுத முகங்களில்
ஆறுதலைக் கொடுப்பாயா?
புதுவருடமே .......
நீ புதிதா ? ....
எனக்குப் புரியவில்லையே...

சக்தி சக்திதாசன்

# சொல்லத்துடிக்குது மனசு..........(தொடர் நாவல்)

## அத்தியாயம் 1



யன்னலை மூடியிருந்த தி ரைச்சீலையின் ஓரத்தினூடாக தெறித்த சூரிய ஒளிக்கற்றைகள் கண்களைக் குத்த முறுகிக் கொண்டே எழுந்து கைக்கடியாரத்தைப் பார்த்தான் மனீஷ். மணி ஆறைத் தொட்டு நின்றது.
"சே , இந்த சம்மர் வந்தது என்றாலே காலத்தூக்கம் அவ்வளவுதான் " என்று மனதில் எண்ணிக் கொண்டே எழுந்தான்.

" இனி என்ன பழைய குருடி கதவைத் திறவடி என்னும் வண்ணம் காலைக்கடன்களை முடித்துக் கொண்டு ஆபீசை நோக்கி ஓட வேண்டியதுதான் " திரும்பவும் அவன் மனம் சலித்துக் கொண்டது.

அவன் வசிப்பது ஒரு மூன்றடுக்கு கட்டிடத்தில் அமைந்துள்ள ப்ளாக்கி லுள்ள ஒரு பிளாட்.

கீழ் மாடியில் அவனது பிளாட்டுக்கு நேராக அமைந்துள்ள பிளாட்டிலுள்ள குழந்தை அழும் சத்தம் அவனுக்கு மேலும் எரிச்சலையூட்டியது.

ஒருவாறு காலைக்கடன்களை முடித்து விட்டு கையிலே காப்பிக் கப்பை எடுத்துக் கொண்டு தனது ரூமுக்குள் நுழைந்தவன், மேசையில் காப்பியை வைத்து விட்டு, கழுத்தைச் சுற்றி டையை வீசி விட்டு அதை அணியத் தொடங்கவும், தொலைபேசி அலறவும் சரியாக இருந்தது.

கையிலே போனைத் தூக்கினான், மறுமுனையில் அம்மாவின் குரல் அதே மாறாத அவசரத்துடன் ஒலித்தது
" தம்பி மனீஷ், சாயந்தரம் வீட்டுக்கு வருவாய் தானே, மறந்திடாதே அப்பாவின் நண்பர் சுந்தரம் குடும்பத்துடன் வருகிறார், நீயும் இருந்தால் தான் நன்றாக இருக்கும் " பதட்டத்துடன் ஆரம்பித்த அம்மாவின் குரல் கெஞ்சுதலாக முடிந்தது.

" அம்மா, ஆபீஸில் வேலை ரொம்ப இருக்குது. ப்ராஜெக்ட் முடியாததினாலே அவசரப் படுத்திறாங்க, என்ன நேரம் வீட்டுக்குக் கிளம்ப முடியுமோ தெரியாது, இதுக்கிடையில் நீங்க வேறு வா, போ என்னுட்டு..." சலிப்புடன் இழுத்தான் மனீஷ்.

" என்னப்பு நாங்க உன்னை ஒவ்வொருநாளும் வா என்று கூப்பி டிகிறோமா? எப்ப ஆவது இப்படி யாராவது நெருங்கிய நண்பர்கள், உறவினர்கள் வந்தாத்தானே ..." அம்மா மீண்டும் கெஞ்சுகிறாள்.

" சரி பாக்கிறேன், ஆனா எத்தனை மணிக்கு வரமுடியுமென்று சொல்ல முடியாது " என்றதும் அம்மா அது போதும் என்று போனை வைத்தாள்.

"சே இனி சாயந்தரம் அங்க போய் உட்கார்ந்து கொண்டு, சுந்தரம் அங்கிள் வேற எப்ப கலியாணம் என்று தொடங்கி விடுவார்.." திரும்பவும் சலிப்புடன், கதவைச் சத்தி லாக் பண்ணி விட்டு தனது காரை நோக்கி நடந்தான் மனீஷ்.

காரில் ஏறி உட்கார்ந்து கொண்டு சன்கிளாஸை மாட்டிக் கொண்டு கார்க் கணாடியில் தன்னைப் பார்த்து தாலைமுடியைக் கைகளால் கோதி விட்டுக்கொண்டான்.

மனீஷுக்கு வயது 28. மூன்று பிள்ளைகளைக் கொண்ட லண்டனில் வாழும் புலம்பெயர்ந்த மத்தியதர தமிழ்க் குடும்பத்தில் மூத்த பிள்ளை.

அப்பா சண்முகமும், அம்மா கனகேஸ்வரியும் திருமணமான புதிதில் 34 வருடங்களுக்கு முன்னால் ஈழத்திலிருந்து லண்டனுக்குப் புலம் பெயர்ந்தவர்கள்.

அவனை விட மூன்று வயது இளையவளான தங்க ஷகீலா, மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு படித்துக் கொண்டிருந்தாள். கடைக்குட்டி டினேஷ் கல்லூரி இறுதி யாண்டில் படித்துக் கொண்டிருந்தான்.

கம்பியூட்டர் துறையில் எம்.எஸ்.சி பட்டம் பெற்று விட்டு ஒரு பிரபலத் தகவல் தொழி நுட்ப கம்பெனியில் ப்ராஜெக்ட் எஞ்சினியராக, கைநி றையக் உழைத்துக் கொண்டிருந்தான் மனீஷ்.

பெற்றோரின் ஆலோசனையின் பேரில் வேலை கிடைத்தவுடன் தனக்கென ஒரு ப்ளாடையும் வாங்கி அங்குதான் வாழ்ந்து கொண்டிருந்தான்.

ஏறக்குறைய ஆறடி உயரம், சுமாரான நிறம், அழகான வாரி விடப்பட்ட சுருள் முடி, அழகாகச் சவரம் செய்த முகம் என மிகவும் கவர்ச்சிகரமான வாலிபன் மனீஷ்.

படிப்பு, படிப்பு என்று இத்தனை காலமும் தன்னை வருத்திப் பட்டம் பெற்று நல்ல வேலையில் அமர்ந்த உடன் திருமணம் என்னும் பந்தத்தில் தன்னை இணைத்துக் கொள்ள அவனுக்கு இஷ்டமில்லை. பிரம்மச்சாரி யாக கொஞ்சக்காலம் இந்த லண்டனில் வலம் வருவோமே, என்று எண்ணினான்.

ஆனால் அவனது பெற்றாரோ வழமையான த,இழ்ப் பெற்றோர்களி னின்றும் மாறுபட்டவர்கள் அல்ல. படிப்பு முடிந்து விட்டது, கைநிறைய உழைக்கிறான், அப்புறம் என்ன இனித் திருமணம் தானே ! என்று எண்ணினார்கள்.

இங்கே தான் எண்ணங்களின் மோதல் ஆரம்பித்தது.

எதோ யோசனையில் ஆழ்ந்திருந்த மனீஷ், எதிரேயிருந்த சிக்னக் லைட், பச்சையாக மாறிவிட்டதை உணர்ந்ததும் திடுக்கிட்டு காரை நகர்த்தினான்.

ஆபிஸ் கார் பார்க்கில் காரை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்து தனது இருக்கையில் அமர்ந்தான். போன் அலறியது. அவனது மனேஜர்,

" என்ன மனீஷ், எப்போது இந்தப் ப்ராஜெக்ட் தனது முடிவைக் காணப் போகிறது? எனது பாஸ் என்னை வறுத்தெடுக்கிறார்" என்றார். ஆங்கிலேயனான அந்த மனிதன் றிச்சார்ட் எப்பவும் தனது இலக்குகளில் தான் கண்ணை வைத்திருபபன் என்று மனீஷுக்கு நன்றாகவே தெரியும்.

" றிச்சார்ட், என்னுடைய டார்க்ர்ட்டின் படி அனைத்தையும் செய்தும் எதிர்பாராத தடங்கல்கள், கஸ்டமர் பக்கத்தில் இருந்து வந்ததினால் தான் கொஞ்சம் டிலேயாகிறது, பார்க்கலாம்"

என்று மிகவும் ஆணித்தரமாக வந்த மனீஷின் பதிலினால் கொஞ்சம் திருப்தியடைந்தவனாக போனை வைத்தான் றிச்சார்ட்.

காண்டீனில் அமர்ந்து சாண்ட்விச்சைக் கடித்துக் கொண்டே தனது உற்ற நண்பன் ஸ்டீவைப் பார்த்து,

" இன்னைக்கு சாயந்தரம் என்னுடைய பெற்றோரிடம் போக வேண்டும், நாங்கள் எண்ணியிருந்தபடி சினிமாவுக்கு போக முடியாது " என்றான் மனீஷ்

" மனீஷ், என்ன அவங்க திரும்பவும் உன்னோட மரேஜ் பற்றி பேசுறாங்களா " சிரித்தபடியே கேட்டான் ஸ்டீவ்.

" அந்தப் பேச்சு எப்போ முடியப் போகிறது ? " புன்சிரிப்புடன் பதிலளித்தான் மனீஷ்.

ஸ்டீவ் அவனுடைய உற்ற நண்பன், தென்னாபிரிக்காவில் இருந்து லண்டனுக்கு கல்வி கற்பதற்காக வந்தவன் படிப்பு முடிந்ததும், அப்படியே வேலை கிடைத்ததும் லண்டனிலேயே தங்கி விட்டான். யூனிவர்சிட்டியிலிருந்து இருவரும் நெருங்கிய நண்பர்கள். ஸ்டீவ் ஒரு வெள்ளைக்காரனாக இருந்தாலும், மனீஷினுடைய குடும்பத்துடன் மிகவும் நெருக்கமாக பழகி வந்தான்.

பண்டிகைக் காலங்களிலும், விடுமுறைகளிலும் மனீசுடன் அவன் வீட்டில் அடிக்கடி தங்குவான்.

மிகவும் சுதந்திரமான மனப்பான்மை கொண்டவன். கலப்புத் திருமணம், ஹோமோசெக்ஸுவல் பழக்கங்கள் இவைகளைப் பற்றி மிகவும் வெளிப்படையான, அவற்றிற்கு ஆதரவான கருத்துக்களைக் கொண்டிருந்தான்.

அவனுக்கும் மனிஷின் அப்பா சண்முகத்திர்கும் இதைப்பற்றிய விவாதங்கள் அடிக்கடி வரும்.

அன்று சாயந்தரம் காரத் தனது பெற்றோர் வீட்டை நோக்கிச் செலுத்திக் கொண்டிருந்தான் மனீஷ்.

ஆபிஸிலிருந்து வீட்டிற்கு வந்து சேரவே மணி ஏழரையாகி விட்டிருந்தது அதற்கு பின்னால் உடைமாற்றிக் கொண்டு கிளம்புவதற்குள் தங்கை ஷகீலா இரண்டுமுறை போன் செய்து விட்டாள். அம்மாவின் அலுப்புத் தாங்க முடியவில்லை போலும்.

காரை அவர்களது வீட்டு டிரைவ் வேயில் நிறுத்தி விட்டு கீழே இறங்கும் போதே, இனிச் சுந்தரம் அங்கிலும், ஆண்டியும் நடத்தப்போகும் குறுக்கு விசாரணையை நினைத்து அவன் மன்ம் சலித்துக் கொண்டது.

(தொடரும்)

## சிரித்து வாழ வேண்டும்



**பையன்:** அப்பா! ஸ்கூல்ல இந்த குமார் தொல்ல தாங்க முடியலப்பா.எப்ப பாரு என்ன அடிச்சுகிட்டே இருக்கான்.

**அப்பா:** நீ இத உங்க வாத்தியார்கிட்ட சொல்ல வேண்டியதுதானடா.

**பையன்:** அட போப்பா! எங்க வாத்தியார் பேரு தான் குமார்



# கலைஞர் பார்வையில் சங்கத்தமிழ்



## நாடு வாழவும் நலிவு தீரவும்

காஞ்சியினை ஆண்ட மன்னன் தொண்டைமான் இளந்திரையன்;
கவிதைபுனையும் ஆற்றலுடையோன் கடமையுணர்வு மிகவுடையோன் !

கடல்வழிவந்தவர் இக்காவலனின் முன்னோர் எனக்கதையுண்டு !
காதலில் தோய்ந்த சோழன்கிள்ளியும் நாகமகள் பீலிவளையும்;

பெற்றெடுத்த பிள்ளைக்கனியமுதாம் இளந்திரையன்
பிழைத்தெழுந்தான் கலம் கலம் மூழ்கிக் கடலில் என்றும்-அந்த

மாவீரனே காஞ்சியினைத் தலைநகராய்க் கொண்டு தொண்டைநாடு
மகுடம் புனைந்தானென்றும் மணிமேகலை இலக்கியம் கூறும்

தொண்டைக்கொடியொன்று பற்றிக் கடலோரம் சேர்ந்ததினால்
திண்டைமான் என்னும் அடைமொழி சார்ந்ததென்றும்

திரையென்றால் அலையன்றோ;அத்திரைமீது மிதந்து வந்து
தரையாளும் இளம் மன்னனாய் வாய்த்ததாலே

இளந்திரையன் எனும் சிறப்புப்பெயர் பெற்றானென்றும்
இனியதமிழ்க் காப்பியமாம் மணிமேகலை;மேலும் இயம்பும்!

இறையனார் அகப்பொருள் உரையுள் நக்கீரனார்
"இளந்திரையம்" எனும் நூல் இவன் இயற்றியது என்பர்

அதியமான் நெடுமானஞ்சிக்காகத் தூதாக வந்து
ஔவை வாதாடியதும் இத்திண்டைமானிடம் தானென்பார்

நன்னூலுக்கு உரைகண்ட மயிலைநாதர்
நல்லூராம்"திரையனதூர்" இவன்பேரால் அமைந்ததென்பர்

நற்றிணையில் மூன்றுபாடல் இளந்திரையனின்
கற்றறி நெஞ்சக் கற்பனைக்கு எடுத்துக்காட்டாம்

நாடாளும் மன்னர் பலர் இவன்பால் நட்புக்கொண்டு
நாடியிவன் மாளிகைக்கு விருந்தாக வந்திடுவார்; இவனோ

அவரையெல்லாம் வரவேற்று அவர்க்கு வேண்டுவன வழங்கி, அரசுதனை நடத்துகின்ற அறவழி பலவும் அன்பாய் விளக்கிடுவான்!

அவ்வாறு ஒருமுறை அவன் தந்த அரசியல் அறிவுரைதான்;
சவ்வாது மணங்கமழும் சங்கப்பாட்டாய் சாகாது வாழுதென்பேன்

"வண்டிக்காலாம் உருளையும்-அதன் அச்சுத்
தண்டில்;பாரையும் கோத்தமைத்துப் புவியில்
செல்லும்வழி தெளிந்து செம்மை நெறி உணர்ந்து
ஒல்லும் வகையெல்லாம் ஒழுங்கான பாதையிலே
செலுத்திடும் வண்டியைப்போல் செங்கோலும்
சிறப்பெய்தி மாண்புதரும்; செழுமை வரும்!

அல்லால்;
வண்டியைச் செலுத்துகின்ற மனிதன் - அதனைக்
கண்டவழி செலுத்தினாலோ ஆரக்கால்பதியும்- ஆழ்பலைச் சேற்றினிலே!

மனம்போன போக்கெல்லாம் மண்ணாள்வோர் சென்று
குணம்கெட்டுத் திரிவரேல் குட்டிச்சுவராகும் நாடு!
நலிவுற்ற மக்கள் - வலிவற்ற ஆட்சி; நாள்தோறும்
பொலிவற்றுப் போகும் தொழில்கள் எனப்புதைந்து விடும் எல்லாமே!

இளந்திரையன் தொண்டைமான் மன்னன் அன்றைக்கு
எடுத்தாண்ட உவமையது என்றைக்கும் பொருந்துமன்றோ ?

வளமிகு நாடு கண்ட மக்கள் வாழ்விலே புதுமை செய்ய
உளமது பக்குவப்படுதல் வேண்டும்;அந்த உண்மையை
உரைக்கும் பாடல் இஃதே
"கால்பார் கோத்து ஞாலத்து இயக்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்,
ஊறு இன்றாகி ஆறு இனிது படுமே;
உய்த்தல் தேற்றான் ஆயின், வைகலும்,
பகைக்கூழ் அள்ளற்பட்டு,
மிகப்பல தீநோய் தலைத்தலைத் தருமே"

(புறநானூறு : பாடல் 165, பாடியவர்: தொண்டைமான் இளந்திரையன்)

பொருள்விளக்கம்

கால்பார்: = வண்டிச்சக்கரமும் பாரும்
சாகாடு=வண்டி
உகைப்போன் மாணின்= செலுத்துவோன்
செம்மையாக இருப்பின்.ஆறு=வழியானது
உய்த்தல் தேற்றான் = செலுத்தும் வகை அறியான்
பகைக்கூழ் அள்ளல்=ஆழ்ந்த பகைச் சேறு
வைகல்=நாள்தோறும்
தலைத்தலை=மென்மேலும்

---

## ஒரு இந்துவின் பார்வை



எனது மனதின் அடித்தளத்தை வருடிக்கொண்டு இருக்கும் இதமான நினைவுகளுக்கு கொஞ்சம் உயிரூட்டிப் பார்க்கிறேன்.

ஒரு இந்துவாக எனக்கு உலகில் இருக்கும் கடமைகளுக்கும், ஒரு மனிதனாக எனக்கு உலகில் இருக்கும் கடமைகளுக்கும் இடையில் இருக்கும் வித்தியாசம் தான் என்ன?
உலகில் மனிதன் என்னும் நிலைகொண்ட எமக்கு இருக்கும் தார்மீகக் கடமைகளுக்கும் மதத்துக்கும் இருக்கும் தொடர்புதான் என்ன?

வித்தியாசம் இல்லை என்கிறது அனைத்து மதங்களும் அடிப்படையில் ஒன்றே என்னும் கொள்கை. ஆனால் வித்தியாசம் என்ற வகையில் பார்க்காமல் தார்மீகக் கடமைகளின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அடிப்படையை வகுத்துக் கொடுத்தது மதம் என்கிற யதார்த்தமான உண்மை தார்மீகக் கடமையாற்றும் மனப்பான்மை கொண்டோரின் மனதில் மதம் ஏற்படுத்திய தாக்கங்களின் உண்மையை வலியுறுத்தி நிற்கிறது

உலகில் மனிதன் என்னும் நிலைகொண்ட எமக்கு இருக்கும் தார்மீகக் கடமைகளுக்கும் மதத்துக்கும் இருக்கும் தொடர்புதான் என்ன?

வித்தியாசம் இல்லை என்கிறது அனைத்து மதங்களும் அடிப்படையில் ஒன்றே என்னும் கொள்கை. ஆனால் வித்தியாசம் என்ற வகையில் பார்க்காமல் தார்மீகக் கடமைகளின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் அடிப்படையை வகுத்துக் கொடுத்தது மதம் என்கிற யதார்த்தமான உண்மை தார்மீகக் கடமையாற்றும் மனப்பான்மை கொண்டோரின் மனதில் மதம் ஏற்படுத்திய தாக்கங்களின் உண்மையை வலியுறுத்தி நிற்கிறது

கிறீஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் நத்தார் புனிதப் பெருநாளையும், ஆங்கிலப் புதுவருட தினத்தையும் கொண்டாடி கழித்திடும் வேளையிது. இந்தக் காலகட்டத்திலே இங்கிலாந்திலே தொலைக்காட்சிப் பெட்டிகளிலே நாம் வருடா வருடம் காணும் நிகழ்வொன்று.

அதாவது பலவிதமான உதவி நிறுவனங்களும் தாம் உலகில் பல்வேறு நாடுகளில், பல்வேறு வகைகளில் அல்லலுறும் மக்களுக்கு ஆற்றும் உதவிகளைப் பற்றியும், அதைத் தொடர்ந்து செவ்வனே நிறைவேற்ற, தமக்கு பொதுமக்களின் உதவியின் தேவையின் அவசியத்தை வலியுறுத்தியும் விளம்பரங்கள் பலவற்றைக் கண்ணுறுகிறோம்.

இது இன்று நேற்று ஆரம்பித்த ஒரு நிகழ்வல்ல நான் லண்டனில் காலடி எடுத்து வைத்த வருடம் தொட்டு, இந்த 33 வருட காலத்தில் காணும் வருடாந்த நிகழ்வு.

இதை ஏன் நான் இங்கே குறிப்பிடுகிறேன் என்றால், மதத்துக்கும் தார்மீகக் கட்மைகளுக்கும் சம்பந்த இல்லை எனப்துதான் உண்மை என்றால், மதத்தோடு பின்னப்பட்ட பெருநாட்களின் போது மனிதனுடைய தார்மீக உணர்ச்சிகளை இலக்கு வைத்து ஏன் விளம்பரங்கள் செய்யப்படுகின்றன?

இப்படியான காலங்களில் மனிதர்கள் மிகவும் ஆழமாகச் சிந்திக்கும் மனோநிலையில் இருப்பது இதற்கு ஒரு காரணம் எனலாம். அதேபோல இப்படியான இறைவன் எனப்படும் சக்தியோடு சம்பந்தப்பட்ட விழாக்காலங்களில் அனைவரும் தம்மைக் கடந்து சமுதாய நோக்குக் கொண்ட ஒரு விரிவான பார்வை கொண்டுள்ளார்கள் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

இந்தக் காரணமே மதம், ஆன்மீகம், இறைவன் சம்பந்தப்பட்ட அடிப்படைகள் மனிதனுடைய தார்மீகக் கடமைகளை வலியுறுத்தி நிற்கிறது என்று சொல்லலாம்.

ஆனால் ஒன்று மட்டும் நிதர்சனமான உண்மை. எந்த மதம் இத்தகிய கோட்பாடுகளை வலியுறுத்துகிறது என்று பார்த்து அதைத் தூக்கிப் பிடித்து, மற்றைய மதங்களை குறைவாக மதிப்பிடும் போதே அங்கே மதப்பிரிவினை என்னும் வேதாளம் தலை தூக்குகிறது.

உண்மையை உணர்ந்து கொண்டவர்கள் மனதில் உறுதியாக ஒன்று மட்டும் தெரி யும் அனைத்து மதங்களும் அற்புதமானவையே. அவை மனிதனை தார்மீக அடிப்படையில் நெறிபடுத்தி மனிதாபிமானத்தின் முக்கியத்துவத்தை போதித்து சமுதாய நோக்குக் கொண்டவர்களாக ஆக்குவதற்கே அமைக்கப்பட்டன.

அதைச்சரிவரப் புரிந்து கொள்ளாதவர்கள். சுயநலத்துக்குகாகவே வாழ்பவர்கள் பிழையான வாதங்களை முன்வைத்து மதப்பிரிவினைகளை வளர்ப்பதால், மதமோ அன்றி ஆன்மீகமோ அன்றி இறைநம்பிக்கையோ தவறாக ஆகி விடாது.

இதுவே இந்த இதழில் ஒரு இந்துவின் பார்வையாகிறது.

ஆக்கம்: சக்தி சக்திதாசன்

***************************************************

## இலக்கியச்சோலை



இலக்கியச் சோலையினுள் நுழைந்ததும் இம்முறை கண்களில் தென்படும் மலர் எது ? காலத்தால் அழியாத அற்புதக் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் அற்புதமான பாடலொன்று.

மிகவும் இளமையிலே காலம் எம்மிடமிருந்து அவசரமாகப் பறித்துச் சென்ற மலர் அது. ஆம் ! காலத்தின் மாற்றத்தினால் வாடிச் சருகாகி விடக்கூடாது என்பதனாலேயோ அன்றி அற்புதமான கவிஞர்களை பாராட்டிச் சீராட்ட எமது சமூகம் தவறி விடுகின்றது என்பதனாலேயோ அந்த உன்னதக் கவிஞனை மிகவும் இளவயதிலேயே காலன் கவர்ந்து சென்று விட்டான்



டி.எம்.எஸ்ஸின் இனிமையான குரலில், ஜெமினி கணேஷனின் அற்புத நடிப்புடன் கலந்தொலிக்கும் இப்பாடலைப் பார்ப்போமா ?

என்னருமைக் காதலிக்கு
வெண்ணிலாவே ! நீ
இளையவளா? மூத்தவளா ?
வெண்ணிலாவே !

காதல் வயப்பட்டுவிட்டான் வாலிபன் அவன் மனதில் அப்பப்பா? எத்தனை உணர்வுகள் இதயத்தின் இன்ப நரம்புகளை மீட்டி இனியகீதம் எழுப்புகின்றன ?

தூங்க முடியவில்லை போங்கள் ! எழுந்து விடுகின்றான். பால் போல ஒளியைப் பாய்ச்சிக் கொண்டிருக்கும் அந்த வெண்ணிலவு தெளிவான வானத்தில் வண்ணத்தாரகைகளினூடு பவனி வருவதைக் கண்ணுறுகிறான்.

காதல் வயப்பட்டவன் சும்மா இருந்து விடுவானா? இதயத்தில் எம்பி விளையாடும் உணர்வுகளுக்கு வார்த்தை வடிவம் கொடுத்து அந்த பால்நிலாவுடன் பால்ய சிநேகிதனைப் போல பேசிக் கொள்கிறான்.

கட்டழகுத் தாரகைகள்
வெண்ணிலாவே ! உனைக்
காவல் காக்கும் தோழியரோ
வெண்ணிலாவே !

பிரபஞ்சத்தில் முரண்பாடற்ற, அழகுக்கு முழு உதாரணமாகிய அந்த வெண்ணிலவின் கூடப்பிறந்தவள் தான் தன் காதலியெனும் உறுதி அவனுக்குக் கிடைத்து விடுகிறது. அவன் கேள்வியோ அவள் இளையவளா? இல்லை மூத்தவளா? என்பதுதான். அத்தனை அழகுவாய்ந்த அந்த வெண்னிலவு தோழியரின்றித் தனித்திருப்பது சாத்தியமோ? கண்சிமிட்டிக் கொண்டிருக்கும் அந்த வானத்து வண்ணத்தாரகைகள் தான் தன் காதலியின் கூடப்பிறந்தவளுக்கு தோழியராம். எப்படி இருக்கிறது அவனது கற்பனை? எங்கோ தூக்கி விடுகிறான் தனது காதலியின் வனப்பை.

கள்ளமில்லா என்னிதயம்
வெண்ணிலாவே ! ஒரு
கள்ளியிடம் இருக்குதடி
வெண்ணிலாவே ! அந்த
வள்ளிதனை நீயறிவாய்
வெண்ணிலாவே ! அதை
வாங்கி வந்து தந்து விடு
வெண்ணிலாவே !

அவனது இதயத்தை திருடியவள் ஒரு கள்ளியாகத்தானே இருக்க வேண்டும். அந்த வள்ளி வேறுயாருமல்ல, தள்ளித் தள்ளி ஓடிப்போகும் வானின் அல்லி ராணி வெண்ணிலவின் சகோதரி தானே ! அவளை அறியாமல் இருக்க முடியுமா ?

தன் இதயத்தைப் பறிகொடுத்து விட்டுத் தவிக்கும் அந்த இளங்காதலன் தனது இதயத்தை வாங்கி வந்து தந்து விடு என்று கெஞ்சுகின்றான் வெண்ணிலாவிடம். ஓ ! உடன் பிறந்தவள் கேட்டுவிட்டாள் கொடுத்து விடுவாள் என்னும் நினைப்போ ?

கெஞ்சினால் தரமாட்டாள்
வெண்ணிலாவே ! நீ
கேட்காமல் எடுத்துவிடு
வெண்ணிலாவே !
அஞ்சிடத் தேவையில்லை
வெண்ணிலாவே ! அது
அவள் தந்த பாடமடி
வெண்ணிலாவே !

அவள் ஒரு பயங்கரமான கள்ளியாயி ற்றே ! அவனைக் கேட்காமலே, அவன் விழிகள் அவள் பார்வையைத் தழுவிக்கொண்ட ஒரு கணத்தில் அவன் இதயத்தை திருடிக் கொண்டவளாயிற்றே ! அவளிடம் கெஞ்சிக் கேட்டால் மட்டும் திருப்பிக் கொடுத்து விடுவாளா என்ன? அதனாலே அவளைக் கேட்காமலே, அவளிடமிருக்கும் தன் இதயத்தை எடுத்து கொடுத்து விடும்படி கேட்கிறான் அவ்விளங்காதலன்.

ஒருவேளை அச்சத்தால் வெண்ணிலவு இதயத்தை எடுத்துக் கொடுக்கத் தவறி விட்டால்.... அதற்கு ஒரு தைரியம் கொடுக்கிறான். அஞ்சிடத் தேவையில்லை... அச்சமில்லை என்னும் பாடத்தைக் கூட அவன் காதலிதான் கற்றுத் தந்தாளாம் போங்கள் !

அந்தக் காலத்திலிருந்து, இந்தக் காலம் வரை கவிஞர்கள் அந்த வானத்து நிலாவுடன் கதைபேசும் கவிதைகளை கற்பனைக் கடலில் முத்தெடுத்து மாலையாக்கி எமக்குக் கொடுத்துள்ளார்கள்.

கற்பனை என்னும் அந்த வனத்துக்குள் நுழைந்து விட்டால் கவிஞர்கள் காணாமல் போய்விடுவார்கள். அந்த வனத்தினுள் தம்மைத் தொலைப்பதற்காகத் தவமிருப்பார்கள் கவிஞர்கள்.

அப்படியான ஒரு இனிமையான கற்பனைக் காட்சியை திரைப்படக் காட்சிக்கு உயிரூட்டமளிப்பதற்காக அற்புதமாகப் படைத்துள்ளார், சொற்ப வயதிலே எமை விட்டு பூவிலகம் எய்திய அமரகவி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள்.

இதுவே இந்த இதழில் இலக்கியச்சோலையில் அடிக்கும் தென்றலாக எம் மனங்களை வருடுகின்றது.

ஆக்கம் : சக்தி சக்திதாசன்

## கண்ணதாசன் கற்கண்டு

பொய்யான உணர்ச்சியில் விளைந்த ஜனனம்,பொய்யான ஆசைகளால் உந்தப்பட்ட வாழ்க்கை,முடிவில் சாக விரும்பாமல் சாகும் அவயூம். ழீதுதான் மானிட ஜென்மம்.

மெய்யுணர்வு தோன்றிவிட்டால்,இனிப்பில்லை: கசப்பில்லை: விருப்பில்லை: வெழ்ப்பில்லை. ஜனனத்திலே சந்தோஷமில்லை; மரணத்திலே துக்கமில்லை. அடிமேல் அடி விழுந்தாலும் கூட, அது கல்லிலே விழுந்த அடியாகத்தான் இருக்குமே தவிர சதையிலே விழுந்த அடியாக இருக்காது.

கவியரசர் கண்ணதாசன் (அர்த்தமுள்ள இந்துமதம்)



## அறிவித்தல்கள்

- தமிழ்ப்பூங்கா இம்முறை மிகவும் தாமதமாக வந்தமைக்காக நிர்வாகத்தின் சார்பில் மன்னிப்புக் கோருகின்றோம்

- அன்புடன் குழுமத்தின் கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற கவிதைகள் இந்த இதழில் இருந்து இடம்பெறும் என்று அறிவித்திருந்தோம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் அடுத்த இதழிலேயே இது ஆரம்பமாகும் என மனவருத்ததுடன் அறிவித்துக் கொள்கிறோம்.

- தமிழ்ப்பூங்காவில் ஆக்கங்களை வெளியிட விரும்புவோர் தமது ஆக்கங்களை டி.ஸ்.சி (tsc) எழுத்துருவிலோ அன்றி யூனிகோட் எழுத்துருவிலே எழுதி editor@thamilpoonga.com அல்லது ssakthi@btintetnet.com என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்



- கதை , கட்டுரைகளில் வரும் பெயர்கள் , சம்பவங்கள் கற்பனையே

- ஆக்கங்களில் வரும் கருத்துக்கள் , மற்றும் படைப்புக்களுக்கு , படைப்பாளிகளே பொறுப்பு

- ஏதாவது ஆக்கங்கள் வேறு இதழ்கள்,சஞ்சிகைகளில் இருந்து உபயோகிக்கப்பட்டிருந்தால் அவை தெளிவாக குறிப்பிடப்பிட்டுள்ளன

- பதிப்புரிமை அனைத்தும் சக்தி சக்திதாசனுக்கே உரித்தானது